சுருக்கம்

பள்ளிக் கல்வி –2025–2026–ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 20 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துவது மற்றும் பணியிடங்கள் தோற்றுவித்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் [பக2(2)] துறை

அரசாணை (நிலை) எண்.191

நாள் 13.08.2025.
திருவள்ளுவர் ஆண்டு – 2056.
விசுவாவசு வருடம், ஆடி–28

படிக்கப்பட்டவை :–

1. அரசாணை (நிலை) எண். 235 பள்ளிக் கல்வித்(E1) துறை, நாள் 24.05.1997
2. அரசாணை (நிலை) எண் 525. பள்ளிக் கல்வி(டி 1) துறை, நாள் 29.12.1997
3 அரசாணை(நிலை) எண்.379, பள்ளிக் கல்வித்(டி1) துறை, நாள் 29.08.1997
4. அரசாணை (நிலை) எண் 49, பள்ளிக் கல்வித் (டி1) துறை, நாள் 01.03.2007.
5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 015853/ டபிள்யு4/இ1/2025 நாள் 29.04.2025, 28.05 2025. 27.06.2025 மற்றும் 08.07.2025

---

**ஆணை : –**

மேலே முதலாவது முதல் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துதல் தொடர்பான நெறிமுறைகள் வகுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. 2025–2026–ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட ஏனையவற்றுள் 20 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துவது" என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு 2025–2026–ஆம் கல்வியாண்டில் 20 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தக் கோரும் கருத்துருவில் பள்ளிக் கல்வி இயக்குநர் கீழ்க்காணும் விவரங்களை தெரிவித்துள்ளார்:–

a. 2025–2026–ஆம் கல்வியாண்டில் 20 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கான நிர்வாக ஒப்புதல் வழங்க வேண்டும்.

b. 2025–2026–ஆம் கல்வியாண்டில் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் இருந்து அரசு மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் ஒவ்வொரு பள்ளிக்கும் சராசரி ரூ.76,750/– (நிலை 18, ரூ.36,900–1,16,600) என்ற ஊதிய விகிதத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடத்தை, சராசரி ரூ.1,18,700/–(நிலை 23, ரூ.56,900–1,80,500) என்ற ஊதிய விகிதத்தில் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடமாக நிலை (Upgraded) உயர்த்தி ஆணை வழங்கப்பட வேண்டும்.

3. மேலும் 2025–2026–ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தக் கோரும் 20 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா 10 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை பாடவாரியாக கீழ்க்கண்டவாறு அனுமதிக்குமாறு மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

| | | | |
|---|---|---|---|
| 1. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | தமிழ் | 1 |
| 2. | .முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | ஆங்கிலம் | 1 |
| 3. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | இயற்பியல் | 1 |
| 4. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | வேதியியல் | 1 |
| 5. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | உயிரியல் | 1 |
| 6. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | கணிதம் | 1 |
| 7. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | வரலாறு | 1 |
| 8. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | பொருளியல் | 1 |
| 9. | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | வணிகவியல் | 1 |
| 10 | முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | கணினி | 1 |

4. மேற்கண்ட 10 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான சராசரி ஊதியம் (Average pay) ரூ.76,750/– (நிலை 18, 36,900–1,16,600) என்ற ஊதியத்தில் 10 பணியிடங்கள் வீதம் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் 20 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 200 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை தோற்றுவிக்க பள்ளிக் கல்வி இயக்குநர் அரசின் அனுமதி ஆணை கோரியுள்ளார். புதிதாக தோற்றுவிக்கப்படவுள்ள 200 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு நிகராக 470 அடிப்படைப் பணியாளர் (காவலர்) காலிப் பணியிடங்களை அரசுக்கு

ஒப்படைப்பு (surrender) செய்யப்படவுள்ளதாக மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. மேலும் பள்ளிக் கல்வி இயக்குநர் பள்ளிகளில் தலா 10 பணியிடம் வீதம் ஆக மொத்தம் 200 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு நிகராக (Equal Value of Live Post) 470 அடிப்படை பணியாளர் காலிப் பணியிடங்களை அரசுக்கு ஒப்படைப்பு (Surrender) செய்யப்படுவதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை கணக்கிட்டு கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

| AVERAGE PAY | | | |
|---|---|---|---|
| **PG ASSISTANT** | | **WATCHMAN AND SWEEPER CUM SCAVANGER** | |
| **LEVEL 18 (36900-116600) 153500/2=76750** | | **LEVEL 1 (15700-50000) 65700/2=32850** | |
| PAY | 76750 | PAY | 32850 |
| DA (55%) | 42213 | DA (55%) | 18068 |
| HRA | 3200 | HRA | 1000 |
| MA | 300 | MA | 300 |
| TOTAL | 1,22,463 | TOTAL | 52218 |
| | | | |
| 122463*200 | 2,44,92,600 | 52218*470 | 2,45,42,460 |
| | | | |
| 24492600*12 | 29,39,11,200 | 24542460*12 | 29,45,09,520 |

6. எனவே 2025-2026 ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்த கோரும் 20 பள்ளிகளுக்கு தலா 10 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் வீதம் 200 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை அனுமதித்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்

7. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து 2025-2026-ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை கோரிக்கையின் போது. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி 20 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது.

i. பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்டுள்ள இணைப்பு–1–இல் குறிப்பிடப்பட்டுள்ள, 20 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது.

ii. மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் 20 உயர்நிலைப் பள்ளிகளுக்கு, ரூ.36,900–1,16,600 (நிலை–18) என்ற ஊதிய நிலையில் ஒரு பள்ளிக்கு 10 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் வீதம் 200 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை மேலே பத்தி 3–இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாடவாரியாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. புதியதாக தோற்றுவிக்கப்படவுள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு நிகரான பணியிடங்கள்(Equal Value of Live Post) 470 அடிப்படைப் பணியாளர் பணியிடங்கள் (Watchman) ஒப்படைப்பு (Surrender) செய்யப்படுகிறது.

iii. மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் 20 உயர்நிலைப் பள்ளிகளில் ரூ.76750/–இல் (நிலை–18, ரூ.36,900–1,16,600) என்ற ஊதிய நிலையில் உள்ள உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களை சராசரி ரூ.1,18,700/–(நிலை 23, ரூ.56,900–1,80,500) என்ற ஊதிய நிலையில் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை (upgraded) உயர்த்தப்படுகிறது.

iv. மேலும் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும் 20 உயர்நிலைப் பள்ளிகளுக்கான ஆசிரியர் பணியிடங்களை நிலை உயர்த்துவதால் செலவினத் உத்தேச தொகை ரூ.29,39,11,200/–க்கு (ரூபாய் இருபத்து ஒன்பது கோடியே முப்பத்து ஒன்பது இலட்சத்து பதினோராயிரத்து இருநூறு மட்டும்)ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

8. தரம் உயர்த்தப்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சம்பளம் குறித்த செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்

"2202 பொதுக்கல்வி 02 இடைநிலைக் கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் –மாநிலச் செலவினங்கள் – AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் – 301 00 சம்பளங்கள்.
(த.தொ.கு. 2202 02 109 AA 30100)

9. மேலே பத்தி 7–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்தை 2025–2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிலிருந்து மேற்கொள்ள பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை, அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

10. தரம் உயர்த்தப்படும் பள்ளிகளில் தற்போது உள்ள 10–ஆம் வகுப்பு மாணவர் எண்ணிக்கையை எதிர்வரும் ஆண்டுகளில் அதிகரிப்பதை உறுதி செய்யுமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

11. புதிய மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் தத்தம் பள்ளியின் தலைமை அலுவலராக (Head of Office) கருதப்படுவர் அவர்களால்

அளிக்கப்படும் சம்பளம் மற்றும் இதர செலவிற்கான பட்டியல்களை சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்/ கருவூல அலுவலர்கள் / உதவிக் கருவூல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

12. இவ்வரசாணை இத்துறையின் மின்கோப்பு எண் efile/3678/ப.க.2(2)/2025, நாள் 8.8.2025 –இல் நிதித்துறையிடம் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான பணியிட பேரேட்டு எண். 202508PSL0141.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**சந்தரமோகன்.B**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர் சென்னை–6.
அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை–6.
மாநகராட்சி ஆணையர்.
சென்னை/கோவை/மதுரை/திருநெல்வேலி/ சேலம்.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5/18/36/79.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.

நகல்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை –9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அனைத்து துறைத் தலைவர்கள்/
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
நிதித்(கல்வி–II/வரவு செலவு பொது I&II/CMPC)துறை சென்னை–9.
திட்டம். வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (வரவு–செலவு) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம்.
சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை–9
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர் பள்ளிக் கல்வித் துறை
சென்னை –9.
பள்ளிக் கல்வி (அநமு/வரவு–செலவு) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்,

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்.**

**பள்ளிக் கல்வித்(ப.க.2(2))துறை**

இணைப்பு–1

அரசாணை (நிலை) எண். 191 ப.க.2(2)துறை, நாள் 13.08.2025

**அரசு மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்படவுள்ள பள்ளிகளின் பெயர் பட்டியல்**

| வ. எண். | பள்ளியின் பெயர் / முகவரி | மாவட்டம் |
|---|---|---|
| 1 | அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, பண்ருட்டி (பண்ருட்டி தொகுதி) | கடலூர் |
| 2 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, ரிஷிவந்தியம் (ரிஷிவந்தியம் தொகுதி) | கள்ளக்குறிச்சி |
| 3 | அரசு உயர்நிலைப் பள்ளி, நேரளகிரி ( வேப்பனஹள்ளி தொகுதி) | கிருஷ்ணகிரி |
| 4 | அரசு உயர்நிலைப்பள்ளி, பேரமனூர் கிராமம், 16–வது வார்டு, மறைமலைநகர் நகராட்சி, செங்கல்பட்டு வட்டம் ( செங்கல்பட்டு தொகுதி) | செங்கல்பட்டு |
| 5 | அரசு உயர்நிலைப் பள்ளி, வளவிசெட்டிபட்டி, சுக்காம்பட்டி ( வேடசந்தூர் தொகுதி) | திண்டுக்கல் |
| 6 | கள்ளக்காம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி (மணப்பாறை தொகுதி) | திருச்சி |
| 7 | அரசு உயர்நிலைப் பள்ளி, திம்மாம்பேட்டை ( ஜோலார்பேட்டை தொகுதி) | திருப்பத்தூர் |
| 8 | அரசு உயர்நிலைப் பள்ளி, செட்டிகுளம் (ஊமச்சி குளம்) | மதுரை |
| 9 | மாத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளி (மாதவரம் தொகுதி) | சென்னை |
| 10 | கஞ்சனூர் அரசு உயர்நிலைப் பள்ளி (விக்கரவாண்டி தொகுதி) | விழுப்புரம் |
| 11 | அரசு உயர்நிலைப் பள்ளி, கலைஞர் கருணாநிதி நகர் (திருச்சி கிழக்கு தொகுதி) | திருச்சி |

| | | |
|---|---|---|
| 12 | மேல்கரணை அரசு உயர்நிலைப் பள்ளி (விக்கரவாண்டி தொகுதி) | விழுப்புரம் |
| 13 | அரசு உயர்நிலைப் பள்ளி, வாலிநோக்கம், கடலாடி வட்டம்(முதுகுளத்தூர் தொகுதி) | இராமநாதபுரம் |
| 14 | அரசு உயர்நிலைப் பள்ளி, முதலிபாளையம்(பல்லடம் தொகுதி) | திருப்பூர் |
| 15 | அரசு உயர்நிலைப் பள்ளி, பாத்தகோட்டா, சூளகிரி வட்டம் (வேப்பனஹள்ளி தொகுதி) | கிருஷ்ணகிரி |
| 16 | லக்கம்பட்டி ஊராட்சி, நீதிபுரம் உயர்நிலைப் பள்ளி, ( மேட்டூர் தொகுதி) | சேலம் |
| 17 | அரசு உயர்நிலைப் பள்ளி, வேளானந்தல் (கீழ்பென்னாத்தூர் தொகுதி) | திருவண்ணாமலை |
| 18 | அரசு உயர்நிலைப் பள்ளி, கணபதிபுரம் (நாகப்பட்டினம் தொகுதி) | நாகப்பட்டினம் |
| 19 | அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, புதுமடம் (இராமநாதபுரம் தொகுதி) | இராமநாதபுரம் |
| 20 | வாரியூர் அரசு உயர்நிலைப் பள்ளி (கன்னியாகுமரி தொகுதி) | கன்னியாகுமரி |

**சந்தரமோகன்.B**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்**